புலிப்பாலுக்காக ஐயப்பன் கானகம் சென்ற போது பந்தள மன்னன் சிவ சொரூபமாக விளங்கும் முக்கண் தேங்காயை எடுத்துச் செல்லுமாறு பணித் தார். அதுவே ஐயப்பனுக்கு முக்கிய நிவேதனமாயிற்று.

## நெ

### நெய்யபிஷேகம்

ஐயப்பன் நெய்யபிஷேகப் பிரியன். பழனி முருகனுக்குப் பஞ்சாமிர்த அபிஷேகம், சபரிமலை ஐயனுக்கு நெய்யபிஷேகம். ''நெய்யபிஷேகப் பிரியனே சரணம் ஐயப்பா'' என்பது பலரும் துதிக்கும் சரண கோஷம்.

இருமுடிக் கட்டில் முக்கியமானது நெய்த் தேங்காய். நெய் நிரப்புதல் ஒரு முக்கியமான சடங்கு. ஒரு கண் திறந்து இளநீர் அகற்றி அக்கண் வழி நெய் நிரப்பப்படும். இது உட்பொருள் உடையது. பக்தனின் மனம் என்னும் தேங்காய் உலகியல் சுவை நீரினை அப்புறப்படுத்திட வேண்டும்; அதன் பின் அதில் ஞான நெய்யினை நிரப்பிடல் வேண்டும். சபரிமலை சந்நிதானத்துக்கு அதுவே அபிஷேகத்தின் பொருட்டு எடுத்துச் செல்லப்பட வேண்டும். தன்னில் எழுப்பிய ஞானமே நெய்யபிஷேகம். அதுவே இறுதி இலட்சியப் பிராப்தி. அபிஷேகத்தின் பின் பக் தன் சிறிது நெய்யினைப் பிரசாதமாக எடுத்துச் செல்கின்றான். அருட்தரிசனத்தில் பெற்ற ஆனந்தத்தின் அடையாளம் அது. அதனைப் பேணுகிறான் பக்தன்.

## ப

### படிபூஜை

மிகுந்த பொருளும், நேரமும் செலவிட்டுச் செய்யும் பூஜை. பதினெட்டுப் படிகளுக்கும் தனித்தனியே பூஜை செய்யப்படும். தற்போது இதன் கட்டணம் ரூ. 15,000/-. 2008 வரை இப்பூஜைக்கு முன்பதிவு செய்யப்பட்டு விட்டது. முன்பு பன்னிரு ஆண்டு களுக்கு ஒரு முறை நிகழ்த்தப்பட்டது. தற்போது மண்டல பூஜை, மகர விளக்கு எனும் நாட்களைத் தவிர்த்து, நடை திறந்திருக்கும் பிற நாட்களில் பூஜை நிகழ்த்தலாம்.

### பதினெட்டாம் படி

ஐயப்பன் பணித்த வண்ணம் அமைத்த படிகள் பதினெட் டாம் படிகள். இவற்றைக் கடந்தே எவரும் தம்மைத் தரிசிக்க வேண்டுமென ஐயன் அருளியதாக ஐதீகம். ஐயப்பனின் திரு வுருவினைப் போலவே தெய்வீகமும், புனிதமும் பக்தர் இதயத் தில் பொங்கி வழியுமாறு தூண்டும் பொலிவுடைய படிகள். ''சத்தியமான பொன்னு பதினெட்டாம் படி'' என மனம் நெகிழப் போற்றும் ஐயப்ப வழிபாட்டின் அருட் சுரபி.

வழிநடை வருத்தமெல்லாம் கரைந்து மறைய, எண்ணி வந்த இலட்சியம் ஈடேற, அளவில்லா ஆனந்தத்துடன், இதயம் விம்ம, உணர்வுகள் எழுச்சியுற, சாதனையின் உச்சமென ஐயப் பன்மார் மனம் நெகிழ்ந்து அளவற்ற ஆனந்தத்தில் தேங்கும் தேக்கமே அப்படிக்கட்டுகளின் முன்பு காணும் இனியகாட்சி. மங்கல வாத்தியங்களின் முழக்கம், நெடுநேரம் காத்திருக்கும் பக்தி ஏக்கம், அற்புத தரிசனம் பெற ஆர்வங்கொண்டு நிற்கும். மன நெகிழ்வு, பல இடங்களிலும், பல சூழல்களிலும், பல வயது களிலும் புரிந்த விரதங்களில் விளைந்த ஆன்ம சாதனை - இவற் றின் திரட்சியே அப்படிகளில் ஏறக்காணும் திருக்காட்சி!




பதினெட்டாம் படிக்கட்டு ஒற்றைக் கல்லில் உருவாக்கப் பட்டது. ஒவ்வொரு படியும் 9 அங்குல அகலமும், 9 அங்குல உயர மும், 5 அடி நீளமும் உடையது. தற்போது இப்படிகள் பஞ்ச லோகத்தால் மூடப்பெற்றுள்ளது.

இருமுடி சுமந்து முதலாண்டு வரும் கன்னி ஐயப்பன்மார் முதற்படியில் சூறைத்தேங்காய் உடைப்பர். இரண்டாம் முறை வருவோர் இரண்டாம் படியில் உடைப்பார். பதினெட்டு முறை முடித்து அதன்பின் இருமுடி சுமந்து வருவோர் தென்னங்கன்று கொண்டு வந்து நடுவர். மீண்டும் ஒன்றாம் படியிலிருந்து தேங் காய் உடைத்து வழிபாடு செய்தலும் உண்டு. இருமுடி சுமந்தே பதினெட்டாம் படி ஏறுதல் மரபு. பந்தள ராஜ வம்சத்தினர் மட்டும் விதிவிலக்காக இருமுடி ஏந்தாது வரும் உரிமை பெற்றுள்ளனர்.

ஐயப்பன்மார் இருமுடி சுமந்து, பக்தி சிரத்தையுடன் படி தொட்டு வணங்கி ஏறுவர்; இருபுறமுள்ள கருத்த சாமி, கறுப்ப சாமிகளை வணங்கி ஏறுவர். கற்பூரத்தை அதற்குரிய குண்டத் தில் வீசிவிட்டு ஏறுவர். சரணம் முழக்கி, ஆன்மீக அதிர்வுகளை அகத்து வாங்கி ஏறுவர். தரிசனத்தின் பின்பு அருகிலுள்ள படிக் கட்டு வழியாகப் பின்புறமாக இறங்குவர்.

ஐயப்பனை வழிபட மேற்கொள்ளும் சபரிமலை யாத்தி ரையே ஓர் அகமுகப் பயணமாக, ஆன்மீக யாத்திரையாக மிளிர் கின்றது. பதினெட்டுப் படிகளும் அகமுகப் பயணத்தின் ஆன் மீகப் பொருளுடன் சிந்திக்கப்படுகிறது. ஐயப்பனின் பூங்காவனத் தின் 18 மலைகளின் குறியீடுகள் என்றும்; ஐயன் ஒவ்வொரு